மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 17 புதன்கிழமை 03.12.2025 கதிர் 388







# உயிரிழப்பு எண்ணிக்கை 474 ஆக அதிகரிப்பு



கொழும்பு, டிச. 03

நாடுதல் நிலவிய சீரற்ற காலநிலையால் இதுவரை 474 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 356 பேர் காணாமல்போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இன்று காலை 10 மணி வரையான தகவல்களின்படி, நாடு முழுவதும் 4 இலட்சத்து 48 ஆயிரத்து 817 குடும்பங்களைச் சேர்ந்த 15 இலட்சத்து 86 ஆயிரத்து 329 பேர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்களால் கண்டி மாவட்டத்தில் 118 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 89 பேரும், பதுளை மாவட்டத்தில் 83 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 53 பேரும், புத்தளம் மற்றும் கேகாலை மாவட்டங்களில் தலா 29 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 28 பேரும் 7➤

# அனைத்து வெள்ள அபாய எச்சரிக்கைகளும் நீக்கம்!

## – நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவிப்பு



கொழும்பு, டிச. 03

இலங்கையில் அமுலில் இருந்த அனைத்துப் பிரதான வெள்ள அபாய எச்சரிக்கைகளும் தற்போது நீக்கப்பட்டுள்ளன என்று நீர்ப்பாசனத் திணைக்களம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்தத் திணைக்களத்தின் அறிக்கையில், பிரதான ஆறுகளின் நீர் மட்டம் தொடர்ந்து குறைந்து வருகின்றது.

தற்போது எந்த ஆறும் பிரதான வெள்ள மட்டத்தில் இல்லை. 7➤

## விமலுக்குப் பிடியாணை



கொழும்பு, டிச. 03

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச இன்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகத்தவறியமையால், அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள ஒரு வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதைத் தொடர்ந்து இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 7➤

## திருக்கோவில் பிரதேசத்தில் யானைகள் பெரும் அடாவடி!



அம்பாறை, டிச. 03

சமகால பேரிடர் காலத்தில் அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் உமிரிப் பகுதியில் யானைகள் பெரும் அட்டகாசம் செய்து வருகின்றன.

மின்சாரம் இல்லாத நிலையில் யானைகள் மின்சார வேலியைத் தாண்டி நூற்றுக்கணக்கான தென்னம்பிள்ளைகளை அழித்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது. இதனால் பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

யானைகளால் மின்சார வேலிகளும் ஏனைய 7➤

## 22 மாவட்டங்கள் பாதிப்பு என்று வர்த்தமானி மூலம் அறிவிப்பு



கொழும்பு, டிச. 03

டித்வா சூறாவளியின் தாக்கத்தால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் பாதிக்கப்பட்ட நாட்டின் 22 நிர்வாக மாவட்டங்கள்தேசிய அனர்த்தத்தால்பாதிக்கப்பட்ட பிரதேசங்களாக அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மரணங்களைப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 9 ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய 7➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -



# இலங்கை அனர்த்த மீட்புப் பணிக்கு ஆப்பிள் நிறுவனம் நிதியுதவி

கொழும்பு, டிசெ.3

வெள்ளம், மண்சரிவு மற்றும் பலத்த காற்று காரணமாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை உட்பட பல ஆசிய நாடுகளுக்கான நிவாரணப் பணிகளுக்கும், மீள்கட்டுமானப் பணிகளுக்கும் உதவிகளை வழங்க ஆப்பிள் (Apple) நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டிம் குக், தனது 'ஓ' கணக்கில் பதிவொன்றை இட்டு இதை உறுதிப்படுத்தியுள்ளார்.

தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேசியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமை காரணமாக அங்குள்ள மக்கள் தற்போது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆப்பிள் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை உட்பட பல ஆசிய நாடுகளில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக 1,300 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன், மில்லியன் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளின் நிவாரண மற்றும் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான பங்களிப்பை வழங்குவதற்கு ஆப்பிள் நிறுவனம் இவ்வாறு முன்வந்துள்ளது. (ஐ)

# 2026 ஆம் ஆண்டுக்கான லிட்ரோ எரிவாயு குறித்த தீர்மானம்



கொழும்பு, டிசெ.3

லிட்ரோ எரிவாயு லங்கா நிறுவனத்திற்கு 2026 ஆம் ஆண்டிற்கான திரவ பெற்றோலிய எரிவாயுவை கொள்வனவு செய்வதற்காக, 2024 ஆம் ஆண்டின் கொள்வனவு வழிகாட்டல்களின் விதிமுறைகளுக்கு அமைய, இரட்டை உறை முறையின் கீழ் தொழில்நுட்ப மற்றும் நிதி ஏலங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன்படி, 05 ஏலதாரர்கள் ஏலங்களை சமர்ப்பித்திருந்த நிலையில், அவற்றில், 02 ஏலங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்குப் பின்னர் நிதி ஏலங்கள் மதிப்பீட்டிற்காகத் தகுதி பெற்றன.

உயர் மட்டத்திலான நிரந்தர கொள்வனவுக் குழு மற்றும் கொள்வனவு மேன்முறையீட்டுச் சபை சமர்ப்பித்த பரிந்துரைகளின் அடிப்படையில், 2026 ஜனவரி மாதம் முதல் 12 மாத காலப்பகுதிக்குத் தேவையான 380,000 மெட்ரிக் தொன் (+20%) திரவ பெற்றோலிய எரிவாயுவை லிட்ரோ எரிவாயு லங்கா நிறுவனத்துக்குக் கொள்வனவு செய்வதற்கான பிரேரணையை Geo Gas Trading S.A. நிறுவனத்திற்கு வழங்குவதற்கு ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# கடுவெல – பத்தரமுல்ல வீதி திறப்பு

*கொழும்பு, டிசெ.3*

*வெள்ள நிலைமை காரணமாக மூடப்பட்டிருந்த கடுவெல முதல் பத்தரமுல்ல வரையிலான வீதி போக்குவரத்துக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.*

*கடந்த சில நாட்களாகப் பெய்த பலத்த மழை காரணமாக கடுவெல நகரம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில், சீரற்ற வானிலை காரணமாக வெள்ளத்தில் மூழ்கியிருந்த அத்துருகிரிய நுழைவாயிலும் நேற்று (02) திறக்கப்பட்டது.*

*அதன்படி, தற்போது அந்த நுழைவாயிலைப் பயன்படுத்தி மக்கள் தமது பயண வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. (ஐ)*



# இந்தக் குற்றச் செயலை மேற்கொண்டால் 5 ஆண்டுகள் சிறை: எச்சரிக்கும் அரசாங்கம்



கொழும்பு, டிசெ.3

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு எதிராக சேறு பூசும் போலி பிரசாரங்களை சிலர் முன்னெடுத்து வருவதாக பொது பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வடகல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் இந்த நிலைமை அதிகரித்தால் அது சாதாரண விடயமாக மாறிவிடும் என தெரிவித்துள்ளார்.

அவ்வாறான ஒரு நிலைமைக்கு இடமளிக்கப்பட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் நபர்கள் இந்த சேறுபூசல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டத்தின் கீழ் அனர்த்த நிலைமைகள் தொடர்பில் போலி தகவல்களை சமூக ஊடகங்களில் பகிர்வதற்கு எவருக்கும் அனுமதி கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு போலி தகவல்களை பகிர்வோருக்கு எதிராக தண்டனை விதிக்கப்பட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை விதிப்பதற்கு சட்டத்தில் இடம் உண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பொய்யான பிரசாரங்கள் தொடர்பில் இதுவரையில் 20 முறைப்பாடுகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு கிடைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(ஐ)

## மலையக பகுதிகளுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து – விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை



டிட்வா சூறாவளியுடன் பெய்த கனமழையால் மலைப்பகுதிகளில் உள்ள நிலத்தடி நீர் ஏற்கனவே நிரம்பி வழிவதால், பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

பல இடங்களில் ஏற்கனவே நிலம் விரிசல் அடைந்து வருவதாலும், அடுத்த சில நாட்களில் கனமழை பெய்தால், மீண்டும் கடுமையான அச்சுறுத்தல் ஏற்படக்கூடும்.

இதன் காரணமாக பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

பருவமழை படிப்படியாக அதிகரிக்கும் சமீபத்திய வானிலை அறிக்கைகளின் அடிப்படையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அடுத்த சில நாட்களில் பருவமழை படிப்படியாக அதிகரிக்கும். நாளை முதல் நாட்டின் வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் மழையுடனான வானிலை அதிகரிக்கும் என வளிமண்டவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

## எமிர் இராச்சியத்தில் இருந்து மீண்டும் உதவி



இலங்கையில் ஏற்பட்ட பேரிடர் சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளுடன், ஐக்கிய அரபு எமிர் இராச்சியத்தில் இருந்து இரண்டாவது முறையாகவும் விமானமொன்று செவ்வாய்க்கிழமை மதியம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. (ஐ)

## யாழ்ப்பாணத்திற்கான எரிவாயு சிலிண்டர்கள் குறித்து வெளியான அறிவிப்பு




யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தேவையான சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு இன்றையதினம் (02) 3,729 லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் எடுத்துவரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாளை (03) 1,716 சிலிண்டர்களும், நாளை மறுதினம் (04) 2,217 சிலிண்டர்களும் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

பொதுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், கட்டம் கட்டமாகத் தொடர்ச்சியாக எரிவாயு சிலிண்டர்களைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (ஐ)


## இலங்கையில் 2.75 லட்சம் சிறுவர்கள் பாதிப்பு

'டித்வா' புயலின் பேரழிவால் இலங்கையில் பாதிக்கப்பட்ட 14 லட்சம் பேரில், 275,000 இற்கும் அதிகமான சிறுவர்கள் அடங்குவதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்துத் தடைகள் காரணமாக உண்மையான பாதிப்பு எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கலாம் என்றும் அந்த நிதியம் கவலை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி எம்மா பிரிகாம் கூறுகையில், சிறுவர்களுக்கு அவசரமாக உதவி தேவைப்படுகிறது. உயிர் காக்கும் சேவைகள் தேவைப்படும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களைச் சென்றடைவது ஒரு காலக்கெடுவுக்கு எதிரான போட்டியாக உள்ளது என்று வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## வெள்ளத்தில் சிக்கி 30 லட்சம் கோழிகள் பலி! 50 ரூபாயை தாண்டவுள்ள முட்டை விலை?



கொழும்பு, டிசெ.3

அனர்த்த நிலை காரணமாக நாடு முழுவதும் உள்ள கோழிப் பண்ணைகளில் சுமார் 30 லட்சம் கோழிகள் உயிரிழந்ததால், உள்ளூர் முட்டை உற்பத்தியாளர்களுக்கு 7 பில்லியன் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்டன் அப்புஹாமி இதனைத் தெரிவித்துள்ளார்.

முட்டை உற்பத்தி செய்யும் பண்ணைகளில், தெதுரு ஓயாவை அண்மித்த பண்ணைகள் அதிகபட்ச சேதத்தை சந்தித்துள்ளதுடன், அங்கு இருந்த சுமார் 15 லட்சம் கோழிகள் உயிரிழந்துள்ளன.

தாழ்நிலப் பகுதிகளில் உள்ள பண்ணைகளில் சுமார் 50 சதவீதம் அழிந்துள்ள நிலையில், அவிசாவளை சாலாவ பிரதேசப் பண்ணைகளில் சுமார் 7 லட்சம் கோழிகள் உயிரிழந்துள்ளன.

தாய் கோழிகளில் 25,000 கோழிகள் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்துள்ளன.

இந்த பெரும் இழப்பின் காரணமாக, தற்போது முட்டையொன்றின் மொத்த விலை 37 ரூபாவாகவும், சில்லறை விலை 40 ரூபாவாகவும் உயர்ந்துள்ளது

அத்துடன், பண்டிகைக் காலத்தை நெருங்கும் போது, முட்டையொன்றின் மொத்த விலை 45 ரூபாவாகவும், சில்லறை விலை 50 ரூபாவைத் தாண்டியும் உயர்வதை தவிர்க்க முடியாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

தற்போதுள்ள சூழலில், பண்ணைகளில் உயிருடன் உள்ள விலங்குகளிடையே நோய் பரவுவதைத் தடுக்க அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# டிஜிட்டல் கைது மோசடிக்கு துணிகர முயற்சி: அதிமுக எம்பி சி.வி.சண்முகம் அதிர்ச்சி புகார்



டிஜிட்டல் கைது என்ற பெயரில் தன்னை மோசடி செய்ய முயற்சித்தது குறித்து, அதிமுக எம்பி சி.வி. சண்முகம் பார்லிமென்ட் தெரு போலீஸ் ஸ்டேஷனில் புகார் அளித்துள்ளார்.

நம் நாட்டில், 'டிஜிட்டல் கைது' என்ற பெயரில் சைபர் கிரைம் மோசடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக, மூத்த குடிமக்களை குறிவைத்து இந்த மோசடிகள் நடக்கின்றன. போலீஸ், அமலாக்கத்துறை, சி.பி.ஐ., என்ற பெயரில், 'மொபைல் போன் வீடியோ' அழைப்பு மூலம், பொதுமக்களை மிரட்டி பணம் பறிப்பதே டிஜிட்டல் கைது ஆகும்.

அந்தவகையில், தன்னை டிஜிட்டல் கைது செய்ய நடந்த மோசடி முயற்சி குறித்து, அதிமுக எம்பி சி.வி.சண்முகம் புகார் அளித்து இருக்கிறார். டில்லி பார்லிமென்ட் தெரு போலீஸ் ஸ்டேஷனில் அவர் அளித்த புகாரில் கூறியிருப்பதாவது: காலையில் பார்லிமென்டிற்கு செல்லும் போது ஒரு போன் அழைப்பு வந்தது. அழைப்பாளர் ஆங்கிலத்தில் பேசி, தன்னை மும்பையைச் சேர்ந்த காவல்துறை அதிகாரி என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

அவர் என்னை ஒரு பயங்கரவாதி என்றார். பின்னர் உடனடியாக என்னைக்கைது செய்யப்போவதாக மிரட்டினார். பின்னர் அந்த அழைப்பு மூத்த போலீஸ் அதிகாரி என்று கூறிக்கொள்ளும் மற்றொரு நபருக்கு மாற்றப்பட்டது. இந்த இரண்டாவது அழைப்பாளர் மிரட்டல்களைத் தொடர்ந்தார். என் மீது 17 குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாக பொய்யாகக் கூறினார்.

இந்த குற்றவாளிகள் தற்போதைய எம்.பி.யை குறிவைக்கும் அளவுக்கு துணிச்சலானவர்கள் மாறி இருக்கின்றனர். இது அச்சுறுத்தல்கள் விடுப்பது அதிகரித்து இருப்பதற்கு ஒரு சான்றாகும். விசாரணையை சிபிஐக்கு மாற்ற வேண்டும். இவ்வாறு சி.வி.சண்முகம் கூறியுள்ளார். (ஐ)

## மின் விபத்தில் பாதிக்கப்பட்டால் ஒரே நாளில் இழப்பீடு




மின் விபத்தில் சிக்கி உயிரிழப்போரின் குடும்பத்துக்கு, 10 லட்சம் ரூபாய் இழப்பீட்டு தொகையை, ஒரே நாளில் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி, தலைமை பொறியாளர்களை, மின் வாரியம் அறிவுறுத்தியுள்ளது. சென்னையில் தரைக்கு அடியில் கேபிள், மற்ற இடங்களில் மின் கம்பம் வாயிலாக, மின் வினியோகம் செய்யப்படுகிறது. அறுந்து விழுந்த மின் கம்பி, கேபிள் போன்றவற்றில் இருந்து வெளியேறும் மின் கசிவில் சிக்கி, மனிதர்கள் பாதிக்கப்படுகின்றனர். மின் விபத்தால் உயிரிழக்கும் நபரின் குடும்பத்துக்கு, 10 லட்சம் ரூபாயும், இரு கைகள், கால்கள், கண்களை இழந்தால், 3 லட்சம் ரூபாயும், ஒரு கை, கால், கண்ணை இழந்தால், 1.50 லட்சம் ரூபாயும் இழப்பீடு வழங்கப்படுகிறது.

இந்த இழப்பீடுகளை, மண்டல தலைமை பொறியாளரே வழங்கலாம். இருப்பினும், இழப்பீடு வழங்க தாமதம் செய்யப்படுவதாக புகார்கள் எழுந்தன. இதுதொடர்பாக, சென்னையில் நேற்று முன்தினம் மின் வாரிய உயரதிகாரிகள் நடத்திய ஆலோசனை கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது.

இதுகுறித்து, மின் வாரிய அதிகாரி ஒருவர் கூறியதாவது: மின் விபத்தில் சிக்கித்தான் உயிரிழந்தார் என்பதை உறுதி செய்ததும், விதிமுறைகளை பின்பற்றி, பாதிக்கப்பட்டவரின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க தாமதமாகிறது.

இதை தவிர்க்க, மின் விபத்தில் இறந்தது உறுதி செய்த பின், ஒரே நாளில் இழப்பீடு வழங்குமாறும், அதிகபட்சம், 48 மணி நேரத்துக்குள் இழப்பீட்டு தொகையை வழங்குமாறும் பொறியாளர்கள் அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். (ஐ)




## 48 மணி நேர உண்ணாவிரதம்: ரயில் ஓட்டுநர்கள் போராட்டம்

'தொடர் இரவு பணி கூடாது பயணப்படி உயர்வை அமல்படுத்த வேண்டும்' என்பது உட்பட, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, ரயில் ஓட்டுநர்கள், 48 மணி நேர உண்ணாவிரதப் போராட் டத்தை, நேற்று துவக்கினர் .

ரயில் ஓட்டுநர்களுக்கு, எட்டு மணி நேரம் பணி என்பதை உறுதி செய்ய வேண்டும். தொடர் இரவு பணியை தவிர்க்க வேண்டும்.

பயணப்படி உயர்வை அமல்படுத்த வேண்டும் என்பது உட்பட, ஆறு அம்ச கோரிக் கைகளை வலியுறுத்தி, அகில இந்திய லோகோ ஓட்டும் தொழிலாளர்கள் சங்கம் சார்பில், நாடு முழுதும் ரயில்வே மண்டல அலுவலகங்களில், நேற்று 48 மணி நேரம் உண்ணாவிரதப் போராட்டம் துவங்கியது.

சென்னை, சென்ட்ரல் அருகில் நடந்த போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இதேபோல், திருச்சி, சேலம், மதுரை, பாலக்காடு, திருவனந்தபுரம் கோட்டங்களிலும் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.

இதுகுறித்து, சங்கத்தின் மத்திய அமைப்பு செயலர் பாலசந்திரன், தென்மண்டல இணை செயலர் பார்த்தசாரதி ஆகியோர் கூறியதாவது:

ரயில் ஓட்டுநர்கள், தற்போது 12 மணி நேரத்துக்கு மேலாக பணியாற்றுகின்றனர். நான்கு தொடர் இரவு பணி வழங்கப்படுகிறது. இதனால், ஓட்டுநர்கள் சோர்ந்து போகின்றனர். போதிய ஓய்வு இல்லாததால், மன நலம், உடல் நலம் பாதிக்கப்படுகிறது.

எனவே, பணி நேரம் குறைப்பு, பயணப்படி உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, உண்ணாவிரதப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளோம். பயணியர் பாதுகாப்பு மற்றும் ரயில் ஓட்டுநர்களின் நலனை கருத்தில் வைத்து, கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். (ஐ)

## புயல் பாதித்த பகுதிகளில் வயிற்றுப் போக்கு பாதிப்பு? கண்காணிக்க உத்தரவு

'தமிழகத்தில், புயல் பாதித்த பகுதிகளில், காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு பரவுகிறதா என்பதை, கண்காணிக்க வேண்டும்' என, மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கு, பொது சுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ளது.

அதன் இயக்குநர் சோமசுந்தரம் அனுப்பியுள்ள சுற்றறிக்கை: மாநிலத்தில் உள்ள அனைத்து மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையங்களிலும், 24 மணி நேரமும், டாக்டர்கள் பணியில் இருத்தல் அவசியம். ஆரம்ப சுகாதார நிலையங்களை பொருத்தவரை, செவிலியர்கள் தொடர்ந்து பணியில் இருத்தல் வேண்டும். மாலை, 4:00 மணி முதல் காலை 9:00 மணி வரை, தேவை அடிப்படையில் டாக்டர்களை பணிக்கு வருமாறு அழைக்கலாம்.

அதேபோல், மருந்தாளுநர்கள், ஆய்வக நுட்புநர்கள், மருத்துவ உதவியாளர்கள், போதிய எண்ணிக்கையில் இருத்தல் வேண்டும். சுகாதார நிலையங்களில், தண்ணீர் தேங்கும் தாழ்வான பகுதிகள், வலுவற்ற மேற்கூரைகள், சாயும் நிலையில் மரங்கள் இருந்தால், அவற்றை சரி செய்ய வேண்டும்.

மழைநீர் வடிகால் வசதிகள், மாற்று மின் இணைப்பு வசதிகள், உரிய மின் விளக்கு வசதிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். ஜெனரேட்டர் சாதனங்களை, பழுதின்றி பராமரித்தல் வேண்டும்.

குடிநீரில் கழிவுநீர் கலக்கிறதா என்பதை ஆய்வு செய்வதும், போதிய அளவு குளோரின் கலந்து குடிநீர் வினியோகிக்கப்படுவதை உறுதி செய்வதும் முக்கியம்.

வெள்ள பாதிப்பு ஏற்பட்டால், உள்நோயாளிகளையும், பேறு காலம் நெருங்கும் கர்ப்பிணியரையும், உயர் சிறப்பு மருத்துவமனைக்கு மாற்ற வேண்டும்.

காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு பாதிப்புகள் பரவுகிறதா என்பதை, கண்காணித்தல் அவசியம். ஓரிடத்தில் மூன்று பேருக்கும் அதிகமானோருக்கு, காய்ச்சல் கண்டறியப்பட்டால், அங்கு மருத்துவ முகாம் நடத்த வேண்டும். (ஐ)





# குழந்தை வளர்ப்பு என்னும் கலை!

அதிகமாக செல்லம் கொடுக்கப்படும் குழந்தைகள் அடம்பிடிப்பார்கள். அது மட்டுமல்ல, அன்பும், அக்கறையுமின்றி ஒரு பாதுகாப்பு உணர்வு (ளுநளைந ழக ளுநஉரசவைல) கிடைக்க பெறாமல் வளர்ந்த குழந்தைகளும் தன்னிச்சையாக இருப்பார்கள். யார் சொல்வதையும் கேட்டு மதிப்பு கொடுத்து நடந்து கொள்ள மாட்டார்கள்.

குழந்தைகள் வளரும் போது பிடிவாதமாக தனக்கு வேண்டிய திண்பண்டம், பொம்மை போன்றவற்றை பெற அடம்பிடிப்பது இயல்பான பழக்கம்தான். குழந்தை வளர வளர இந்த வகை பிடிவாத குணம் குறையும். வளர்ந்து வரும் குழந்தை தனக்கு பிடித்ததை கேட்டு அடம் பிடித்து அழுவது இயற்கை தான். ஆனால் அதுவே எல்லை மீறும் போது பெற்றோர்கள் சிந்தித்து செயற்பட வேண்டும்.

ஒரு வயதிற்கு பிறகு குழந்தையிடம் பிடிவாதக் குணம் தோன்ற ஆரம்பிக்கும். 18 -24 மாதங்களில் அதிகரித்து தானாகவே ஒழுக்கமான நடவடிக்கைகள் கூடியவரை ஏற்பட்டுவிடும். இந்தப் பருவத்தில் பெற்றோர் குழந்தையைக் கவனமாக கையாள வேண்டும். பிடிவாதம் பிடிக்கும் குழந்தையை அடிக்கத் தொடங்கினால், குழந்தை தனக்கு பிடிக்கவில்லையானால் அடிக்கலாம் என்று புரிந்துகொள்ளும்.

பிடிவாத குணம் முளையிலே கிள்ளிவிட வேண்டிய நச்சுமரம்! இதை வளர விட்டால் குழந்தையும் எதிர்காலம் வீணாகும்.

ஓரளவு வளர்ந்த பிறகும் குழந்தை அதிகமாக அடிக்கடி பிடிவாதம் பிடிப்பதற்கு பல காரணங்கள் உண்டு:

நோய்கள்
உயிரியல் ரீதியானவை
சமூக ரீதியானவை
சுற்றுச்சூழல் ரீதியானவை

1. நோய்க் காரணங்கள்

சில மனநல பிரச்சினைகளால் குழந்தைகளும், வளர் இளம் பருவத்தினரும் அதிகமாக அடம் பிடிக்கின்றனர்.

கவனக்குறைவு மற்றும் அதிக இயக்கம் என்ற குறைபாடு(யுனுஉனு)

ஆட்டிசம் **(Autism)**
மன வளர்ச்சி குன்றியவர்கள
மனத் தொய்வு **(Depression)**
மனப் பதற்றம் **(Anxiety)**

2. உயிரியல் காரணங்கள்

மரபு ரீதியானவை: பெற்றோர், அவர்களின் பெற்றோர்கள், உடன்பிறந்தவர்கள் யாராவது அதிகமாக பிடிவாத குணம் கொண்டவர்களாக, அடம் பிடிப்பவர்களாக இருந்தால் குழந்தையும் அதே இயல்பை மரபு வழியாகக் கொண்டிருக்கும்.

கருவில் சிசுவிற்கு நச்சுப் பொருள்களின் தாக்கம்.

கருவுற்ற தாய்க்கு புகைபிடித்தல், மது அருந்துதல், புகையிலை பொருட்கள் பயன்படுத்துவது போன்ற



பழக்கங்கள் இருந்தால், அவை பிறக்கும் குழந்தையின் நடத்தைகளை பாதிக்கும்.

3. சுற்றுச்சூழல் காரணங்கள்

காற்று மாசு மற்றும் நீர் மாசு குழந்தைகளுக்கு நடத்தை பாதிப்புகளை ஏற்படுத்தும்.

4. ஊட்டச்சத்துக்கள் குறைபாடு

குழந்தைக்கு இரும்புச்சத்து, தயமின்(வைட்டமின் டீ1), டிரிப்டோபேன், அமினோ அமிலம் போன்ற நுண்ணூட்ட சத்துக்களின் குறைபாடுகள் இருந்தால், குழந்தை அடம் பிடிக்கும்.

5.சமூக காரணங்கள்

வறுமை, வேலையின்மை, குடும்பங்களை உதாசீனப்படுத்துதல்

குழந்தையை உதாசீனப்படுத்துவது, தாக்குவது போன்றவை**(Child Abuse)**

6.குடும்ப சூழ்நிலை காரணங்கள்

இரு பெற்றோரும் வேலைக்குச் செல்பவர்களாக இருந்து, குழந்தையை கவனிக்க அவர்களுக்கு நேரமே இல்லாமல் போனால்

ஒரு பெற்றோர் மட்டும் இருப்பது பிடிவாதத்தை அதிகரிக்கலாம்

குழந்தைகளை அதிகமாக திட்டி, அடித்து வளர்க்கும் பெற்றோர்

குழந்தைகளிடம் எல்லாவற்றுக்கும் பணியும் பெற்றோர்

உடன் பிறந்தவர்களை போட்டியாக விரோதமாக நினைப்பது (ளுடிடைiபெ சுiஎயடசல)

குழந்தையுடன் பெற்றோர் அதிக நேரம் செலவிடாத நிலை.

இவற்றில் மாற்றக்கூடிய காரணங்கள் இருந்தால் மாற்றலாம். இயற்கையான விலை குறைந்த ஊட்டச்சத்துக்களை தரலாம். தேவையானால் மருத்துவரை அணுகலாம்.

திடீரென்று அதிகப் பிடிவாதத்திற்கான சில காரணங்கள்

அடுத்த குழந்தை பிறப்பு.

வீட்டில் ஒரு புதிய நபர் வந்து வாழ ஆரம்பிப்பது.

வீட்டில் ஏதாவது துயர சம்பவம்.

வீட்டை மாற்றுவது.

வீட்டு உதவியாளர்களை மாற்றுவது

பள்ளியை மாற்றுவது.

நண்பர்களைப் பிரிவது.

குழந்தைகள் பிடிவாதத்தை எப்படி எல்லாம் வெளிப்படுத்துவார்கள்?

பெரிய குரல் எடுத்து அழுவது.

சமாதானம் ஆகாமல் ரொம்ப நேரம் அழுவது.

பொருள்களை விட்டெறிவது. துணிமணிகளை விட்டெறிவது. துணிகளை கிழிப்பது.

பேசத் தெரிந்தால் திட்டுவது. பெரிய குரலில் தகாத வார்த்தைகள் சொல்வது.

பக்கத்தில் இருப்பவர்களை அல்லது ஓடி வந்து பெற்றோரை அடிப்பது, கடிப்பது, கிள்ளுவது

பொருட்களால் அடிப்பது, கீறி விடுவது.

இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு அழுவது, கத்துவது (உ-ம்) தரையில் பாத்ரூமில்

கடைகளில், தெருக்களில் விற்கும் பொருட்களைக் கேட்டு அங்கேயே பெரிதாக அழுவது, திட்டுவது, கீழே விழுந்து புரண்டு அழுவது.

யாரையும் கிட்டே நெருங்க விடாமல் தடுப்பது

வீட்டில் உள்ள அல்லது பெரிய குழந்தையின் புத்தகங்களை, பேப்பரை, கிழிப்பது அவற்றில் கிறுக்குவது.

இதெல்லாம் நிறைய பெற்றோர்கள் சிரமத்துடன் அனுபவித்து இருப்பார்கள்.

எப்படி சமாளிப்பது?

சில செய்திகளை மனதில் நிச்சயப்படுத்திக் கொண்டு செயலில் இறங்க வேண்டும்.

எல்லா அடத்துக்கும் நாம் பணியவும் கூடாது. அதே சமயம் மொத்தமாக மறுப்பும் தெரிவிக்கக் கூடாது. குழந்தையை திசை திருப்புவது எளிது.



ஒரு புதிய பொருளை பார்த்தால், குழந்தை பழைய பொருளை, தான் பிடிவாதம் பிடித்த பொருளை மிக எளிதில் மறந்துவிடும்.

ஆர்ப்பாட்டமும் அலப்பறையும் தாங்கவில்லை என்று அல்லது கடைகளில் அவமானமாகிவிடும் என்று நினைத்து கேட்பதை வாங்கி கொடுத்தால் அது அவனுக்கு வெற்றி. மீண்டும் மீண்டும் இதே பிடிவாதம் தொடரும்.


மிகவும் பொறுமையாக இருக்க வேண்டும். நம் கோபத்தை நாம் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

குழந்தை கத்தி அழும் போது, நாமும் பெரிய குரலில் திட்டுவதோ அறிவுரை தருவதோ கூடாது.

சமயோசிதமாக பேசி அந்த சூழ்நிலையில் இருந்து குழந்தையை வெளியே கொண்டு வர வேண்டும்.

குழந்தைகள் கேட்பதையெல்லாம் செய்வதைப் பெற்றோர்கள் நிறுத்தவேண்டும். இதைத் தொடர்ந்து செய்தால் நாம் என்ன கேட்டாலும் கிடைக்கும் என்று குழந்தைகள் நினைத்துக்கொள்வார்கள், அதையே நம்பத் தொடங்கிவிடுவார்கள். வளர்ந்தபின்னரும் இதே எண்ணம் தொடரும். கேட்டதையெல்லாம் நாம் தரலாம், (7ஆம் பக்கம் பார்க்க...)

# ஐரோப்பா போரை நாடினால் ரஷ்யா தயார் அதிபர் புடின் திட்டவட்டம்



'ஐரோப்பா போரை நாடினால் ரஷ்யா தயாராக உள்ளது' என அதிபர் புடின் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதித் திட்டம் குறித்து, அதிபர் டிரம்ப் தூதர்களுடன் புடின் 5 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர்,

இது தொடர்பாக ரஷ்ய அதிபர் புடின் கூறியதாவது: ஐரோப்பா போரை நாடினால் அதற்கு ரஷ்யா தயாராக உள்ளது.

உக்ரைன் மோதலுக்கான அமைதித் திட்டத்தை இறுதி செய்வதற்கான அமெரிக்கா தலைமையிலான முயற்சிகளை ஐரோப்பிய தலைவர்கள் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றனர்.

அவர்களிடம் அமைதியை உருவாக்குவதற்கு எந்த திட்டமும் இல்லை. அவர்கள் போரின் பக்கம் உள்ளனர். இந்திய பயணத்தின் போது நானும், பிரதமர் மோடியும் இந்திய இறக்குமதிகள் குறித்து விவாதிப்போம்.

இந்திய இறக்குமதியை விரிவுபடுத்துவது குறித்து ஆலோசனை நடத்துவோம். எங்கள் தேசிய நலன்களைக் கருத்தில் கொண்டு செயல்படும், பொருளாதாரக் கொள்கையை நாங்கள் தொடர்ந்து பின்பற்றுவோம். இவ்வாறு அதிபர் புடின் கூறினார். (ஐ)

## இம்ரான் கானுக்கு சித்ரவதை சிறைக்கு சென்று திரும்பிய சகோதரி கதறல்




சிறையில் உள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் நலமுடன் உள்ளார், ஆனால் அவரை மன ரீதியாக சித்ரவதைக்கு ஆளாக்குகின்றனர் என்று அவரது சகோதரி உஸ்மா கான் தெரிவித்துள்ளார்.

பாக். முன்னாள் பிரதமரான இம்ரான் கான் தெஹ்ரிக் இ இன்சாப் என்ற பெயரில் கட்சி ஒன்றை நடத்தி வருகிறார். பதவியில் இருந்த போது, தமக்கு கிடைத்த பரிசு பொருட்களை அரசு கருவூலத்தில் சேர்க்காமல் மனைவியுடன் சேர்ந்து விற்பனை செய்து சொத்துகள் சேர்த்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுதவிர மேலும் பல வழக்குகள் இம்ரான் மீது தொடுக்கப்பட்டன.

அதில் பாக். தூதரகம் அனுப்பிய ரகசிய தகவல்களை கசியவிட்டதாக தொடரப்பட்ட வழக்கில் இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து, அவர் அடியாலா சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார்.

சிறையில் உள்ள அவர், கொல்லப்பட்டதாக பாகிஸ்தானில் பேச்சுகள் எழுந்தன. இதையடுத்து, பாக். முழுவதும் இம்ரான் கட்சியினர் பெரும் கொந்தளிப்பில் இருந்ததோடு, போராட்டங்களிலும் குதித்தனர். அவர் உயிருடன் உள்ளாரா? இல்லையா? என்று தெரியவில்லை என்று இம்ரான் கான் குடும்பத்தினர் தொடர்ந்து கூறி வந்தனர். இந்த குற்றச்சாட்டை சிறை நிர்வாகம் மறுத்து வந்த நிலையில், இன்று இஸ்லாமாபாத் ஐகோர்ட் மற்றும் அடியாலா சிறை வளாகம் முன்பு இம்ரான் கட்சியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் திரண்டனர். இம்ரான் உடல்நிலை எப்படி உள்ளது? சிறையில் உள்ளவரை காட்டுமாறு கூறி முழக்கங்களை எழுப்பினர். போராட்டத்தில் இம்ரான் சகோதரிகளில் ஒருவரான உஸ்மா கான் பங்கேற்றார். நேரம் கடந்து செல்ல, செல்ல அங்கு பத்றமான சூழல் காணப்பட்டது. இதையடுத்து, இம்ரான் கான் உள்ள சிறைக்குள் செல்ல உஸ்மா கானுக்கு சிறை நிர்வாகம் அனுமதி அளித்தது. ஒருவழியாக எங்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது மிக்க மகிழ்ச்சி என்று நிருபர்களிடம் கூறியபடியே உஸ்மா கான் சிறை வளாகத்திற்குள் நுழைந்தார்.

சிறிது நேரம் கழித்து, சிறை வளாகத்தில் இருந்து வெளியே வந்த உஸ்மா கான், தமது சகோதரர் இம்ரான் கான் உயிருடன்தான் உள்ளார் என்று அறிவித்தார். ஆனால் மன ரீதியாக அவரை சிறைக்குள் சித்ரவதைக்கு ஆளாக்குவதாக கூறினார். (ஐ)



## உக்ரைனின் முக்கிய நகரை கைப்பற்றியது ரஷ்யா

உக்ரைனின் முக்கிய போக்குவரத்து நகரமான, டோனெட்ஸ்க் மாகாணத்தின் போக்ரோவ்ஸ்க்கை முழுமையாக கைப்பற்றியதாக ரஷ்யா அறிவித்து உள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே கடந்த 2022, பிப்., முதல் போர் நடைபெற்று வருகிறது. இதனை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் தீவிரமாக முயன்று வருகின்றன.

போரை நிறுத்த ரஷ்யாவுக்கு கடுமையான அழுத்தங்கள் கொடுத்ததுடன் பொருளாதார தடைகளையும் அமெரிக்கா விதித்துள்ளது. ஆனால் கடும் எதிர்ப்பையும் மீறி ரஷ்யா, உக்ரைன் மீதான தாக்குதலை தொடர்ந்து வருகிறது.

இந்த நிலையில், கிழக்கு உக்ரைனின் முக்கிய போக்குவரத்து நகரமான போக்ரோவ்ஸ்க்கை முழுமையாக கைப்பற்றியதாக ரஷ்யா அறிவித்து உள்ளது. இதேபோல், கார்கிவ் பகுதியில் உள்ள வோவ்சான்ஸ்க் நகரமும் ரஷ்ய கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் சிறப்பு துாதர் ஸ்டீவ் விட்காப், ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் அதிபர் விளாடிமிர் புடினை சந்தித்து போர் நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். அதற்கு முன்னதாக ரஷ்யாவின் ராணுவ தளபதி வலேரி கெராசிமோவ், அதிபர் புடினிடம் இந்த தகவலை பகிர்ந்துகொண்டார்.

இந்நகரகத்தை கைப்பற்ற ரஷ்யா கடந்த ஆண்டு முதல் முயன்று வந்தது. ஆனால் இந்த தகவலை உக்ரைன் ராணுவம் இன்னும் உறுதிப்படுத்தவில்லை. (ஐ)

## சீனா ஜப்பான் உறவில் விரிசல்: 1,900 விமானங்கள் ரத்து

ஜப்பான் நாட்டுடனான உறவில் ஏற்பட்ட விரிசலைத் தொடர்ந்து, அந்த நாட்டுக்கு இந்த மாதத்தில் இயங்க வேண்டிய, 1,900 விமான சேவைகளை சீனா ரத்து செய்துள்ளது.

தெற்காசிய நாடான தைவானை தன் நாட்டின் ஒரு பகுதியாக, நம் அண்டை நாடான சீனா உரிமை கொண்டாடி வருகிறது. தைவானை அச்சுறுத்தும் வகையில், தன் போர்க் கப்பல்கள் மற்றும் போர் விமானங்களை சீனா அடிக்கடி அனுப்பி வைக்கும்.

இவ்வாறு தென்சீனக் கடல் பகுதியில் நிறுத்தப்படும் போர்க் கப்பல்கள் தங்களுடைய நாட்டுக்கு அச்சுறுத்தலாக இருந்தால், பதிலுக்கு போர்க் கப்பல்களை நிறுத்துவோம் என, ஆசிய நாடான ஜப்பானின் பிரதமர் சனே டகாய்ச்சி சமீபத்தில் கூறினார்.

இது, இரு தரப்பு உறவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், டிசம்பர் மாதத்தில் ஜப்பானுக்கு இயக்கப்படும், 1,900 விமான சேவைகளை ரத்து செய்வதாக சீனா நேற்று அறிவித்துள்ளது. இது இரு நாட்டுக்கும் இடையே, சீனா இயக்கும் விமான சேவைகளில், 40 சதவீதமாகும். (ஐ)



## உயிரிழப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளனர். அத்துடன், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 2 இலட்சத்து ஆயிரத்து 875 பேர் நாடு முழுவதும் உள்ள 1,385 நலன்புரி முகாங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## 22 மாவட்டங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பதிவாளர் நாயகம் சசிதேவி ஜலதீபனினால் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய கண்டி, நுவரெலியா, பதுளை, குருநாகல், மாத்தளை, கேகாலை, கம்பஹா, முல்லைத்தீவு, அனுராதபுரம், கொழும்பு, யாழ்ப்பாணம், பொலனறுவை, மன்னார், புத்தளம், இரத்தினபுரி, மொனராகலை, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கிளிநொச்சி, வவுனியா, களுத்துறை ஆகிய நிர்வாக மாவட்டங்களே தேசிய அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## விமலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி செயலகத்தால் தேசிய சுதந்திர முன்னணிக்கு வழங்கப்பட்ட 40 அரச வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன் விளைவாக அரசாங்கத்துக்கு 9 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

## அனைத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாகலகம் வீதியில் உள்ள களனி ஆற்றில் மட்டுமே இன்னும் ஓர் எச்சரிக்கை மட்டம் காணப்படுகின்றது. இருப்பினும் அதன் நீர் மட்டம் குறைந்து வருகின்றது.

'டித்வா' புயலினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்குப் பிறகு, கடந்த 24 மணி நேரத்தில் அனைத்து கண்காணிக்கப்பட்ட நிலையங்களிலும் மழைவீழ்ச்சி மிகக் குறைந்த அளவுக்குச் சரிந்துள்ளது.

அத்துடன் ஹன்வெல்ல, கிளேன்கோர்ஸ் மற்றும் இரத்தினபுரி உட்பட பல முக்கிய இடங்களில் நீர் மட்டம் சாதாரண நிலைக்குத் திரும்பியுள்ளது.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகள் நடைபெற்று வருவதால், அதிகாரிகள் தொடர்ந்து ஆறுகளைக் கண்காணித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருக்கோவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொங்கிறீட் தூண் வேலிகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

தென்னந்தோட்ட உரிமையாளர்கள் நேற்று அங்கு சென்று பார்வையிட்ட போது அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் மற்றும் அம்பாறை மாவட்ட அரசா அதிபரின் கவனத்துக்கு இந்த யானைகளின் அட்டகாசங்கள் பற்றிய முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தபி பகுதியில் இரவானதும் மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர்.

## வெற்றிடமாக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு புதிய உறுப்பினர் தெரிவு!

*வெற்றிடமாக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக நெய்யா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹீர் பெயரிடப்பட்டுள்ளார்.*

*ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகக் கடமையாற்றிய முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது அண்மையில் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து குறித்த நாடாளுமன்ற ஆசனம் வெற்றிடமாகியிருந்தது.*

*அதன்படி நிலவிய குறித்த வெற்றிடத்துக்கு நெய்யா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹீர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக பெயரிடப்பட்டுள்ளார்.*

*ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினால் இந்தப் பெயர் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

## இன்று முதல் வழமைக்கு திரும்பியுள்ள சாரதி அனுமதிப்பத்திர சேவைகள்!

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையால் தடைப்பட்டிருந்த மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் சாரதி அனுமதிப்பத்திரக் கணினி முறைமை தற்போது முழுமையாகச் சீர்செய்யப்பட்டுள்ளதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி வேரஹெர பிரதான அலுவலகம் மற்றும் நாட்டின் அனைத்துப் பிரதேச அலுவலகங்களிலும் எந்தவிதமான சாரதி அனுமதிப்பத்திர புதுப்பித்தல் உள்ளிட்ட அனைத்துச் சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைமை தடைப்பட்ட நாட்களில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்த மக்களின் வசதிக்காக முன்னர் அறிவிக்கப்பட்ட பின்வரும் விசேட ஏற்பாடுகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி முறைமைக் கோளாறு மற்றும் வானிலை காரணமாக இரத்துச் செய்யப்பட்ட பரீட்சைகள், பின்வரும் புதிய திகதிகளில் நடைபெறும்:

2025.11.27 அன்று நடைபெறவிருந்த பரீட்சைகள் - 2025.12.08 அன்று நடைபெறும்.

2025.11.28 அன்று நடைபெறவிருந்த பரீட்சைகள் - 2025.12.09 அன்று நடைபெறும். (இந்தப் பரீட்சைகள், உங்களின் நேரம் ஒதுக்கப்பட்ட ஆவணத்தில் **(Booking Document)** குறிப்பிடப்பட்டுள்ள அதே நேரத்திலேயே நடைபெறும்.)

## சீரற்ற வானிலையால் நாட்டில் உள்ள 156 நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பாதிப்பு!

சீரற்ற வானிலையால் நாடு முழுவதும் உள்ள 343 நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 156 இற்குப் பகுதியாக அல்லது முழுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் சந்தன பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 126 தற்போது வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும் 30 நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் சீர்செய்யப்பட்டு வருகின்றன.

மீவத்துர சுத்திகரிப்பு நிலையத்தை இன்று செயற்படுத்த எதிர்பார்ப்பதாகவும், அது செயற்படுத்தப்படுவதன் மூலம் பிலிமத்தலாவ மற்றும் கெலி ஓயாவுக்கு நீர் வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மற்றும் கண்டி நீர் வழங்கல் செயல்முறை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நகரின் எல்லைக்குள் பகுதி அளவில் மட்டுமே நீர் வழங்கப்படுவதாகவும், கண்டி மற்றும் பேராதனை வைத்தியசாலைகளுக்கு முழுமையாக நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சந்தன பண்டார தெரிவித்தார்.

மேலும் கட்டுகஸ்தோட்டை நீர் சுத்திகரிப்பு நிலையத்தை மீண்டும் செயற்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சியுள்ள செயலிழந்த நீர் சுத்திகரிப்பு நிலையங்களை சீர்செய்வதன் மூலம் அடுத்த சில நாட்களில் 100மூ நீர் விநியோகத்தை வழங்க முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குழந்தை வளர்ப்பு...

ஆனால் சமூகம் தராது, இல்லையா? இவ்வளவு ஏன், குழந்தையின் வகுப்பில் இருக்கும் பிற மாணவ மாணவியர்கூட அவனது ஃஅவளது எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி நடந்துகொள்ள மாட்டார்கள். இது குழந்தைக்குப் பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தும்.

கடையில் அல்லது வீதியில் அழும் குழந்தை ஒரு விலை உயர்ந்த தேவையில்லாத பொம்மைக்காக அடம் பிடிக்கிறது என்றால், விலை குறைந்த ஆனால் குழந்தைக்கு உபயோகமான அழகான பொருளை வாங்கித் தரலாம்.

பள்ளிக்கூடப் பை கேட்டு அழும் குழந்தைக்கு அழகான அவனுக்கு பிடித்த விலங்குகள் படம் போட்ட வரையும் புத்தகம் வாங்கி தரலாம். அதற்கு அவனிடம் நைச்சியமாக பேச வேண்டும். சிறிது நேரம் முயன்றும் முடியவில்லை என்றால் அவனிடம் சமாதானம் பேசவோ, கெஞ்சவோ, கொஞ்சவோ கூடாது. நாமும் அழ ஆரம்பிக்கக் கூடாது. 'சரி நீ மெதுவாக வா! நாங்க கிளம்பிகிறோம்' என்று மெதுவாக வெளியேற ஆரம்பிக்க வேண்டும். எதுவும் நடக்காது என்ற உணர்வுடன், துணை இல்லை என்ற பயத்தில் எழுந்து பின்னால் வரும். இது சிறிது நேரம் ஒதுக்கி வைத்தல் (வுைஅந ழுரவ) அல்லது தனியாக வைத்தல் முறைதான். ஆனால் இதை கடைசி ஆயுதமாகத்தான் பயன்படுத்த வேண்டும்.

சோக்லேட் எடுத்து தரச் சொல்லி கிச்சனில் அலறும் குழந்தையை, 'வாசலில் புது குருவி வந்து இருக்கு பார்' என்று கூறி வெளியே வந்து காட்டினால், அந்தப் புது ஆசையில் (நேற குழரனெ ஐவெநசநளவ) பேய் அலறலும் நின்று விடும்.

ஒன்றுக்கு மாற்றாக மற்றொன்று என்பதை லஞ்சம் போல் மாற்றி விடக் கூடாது. குடும்பத்தினர் அனைவரும் ஒரே மாதிரி செயற்பட வேண்டும். அப்பா சோக்லேட் தர மாட்டேன் என்று சொல்ல, குழந்தை அலற, பாட்டி எடுத்து கொடுத்து விட்டால் அது தவறு. குழந்தையின் நடவடிக்கைகளுக்கு சில கட்டுப்பாடுகள், எல்லைகள் வகுத்துக் கொள்ள வேண்டும். எல்லோரும் அதையே பின்பற்ற வேண்டும். சாப்பிடும் நேரம் தொலைக்காட்சி, தொலைபேசி கிடையாது என்றால் எல்லோருக்கும் அப்படியே. குழந்தை கேட்கும் சிலவற்றுக்கு மாற்றாக சிலவற்றை கூறலாம். இன்று சரியான நேரத்தில் வீட்டுப்பாடங்களை முடித்தால் அருகில் இருக்கும் பூங்காவில் சறுக்கி விளையாடலாம். ஒவ்வொரு நல்ல நடத்தைக்கும் ஸ்டார் தருவது, பத்து ஸ்டார் சேர்ந்தவுடன் அவனுக்கு பிடித்த உபயோகமான பரிசை தரலாம். 20 ஸ்டார் சேர்ந்த உடன் அதிகச் செலவில்லாத ஒரு அரைநாள் சுற்றுலா செல்லலாம்.

ஒரு சில அணுகுமுறைகள் மட்டும் உதாரணமாக கொடுத்து இருக்கிறேன். அந்தந்த பெற்றோருக்கும் குழந்தைக்கும் இருக்கும் கெமிஸ்ட்ரிக்கு தகுந்தபடி நீங்கள் திட்டங்களை தீட்டிக் கொள்ளலாம்.

குழந்தையை அவனது கண்ணோட்டத்தில் கையாள வேண்டும். அடம்பிடித்தால் அவன் எதிரி இல்லை. குழந்தைக்கு எந்தவிதமான தண்டனையும் தரக்கூடாது, அடிப்பது, கிள்ளுவது, தலையில் குட்டுவது, கண்களை உருட்டி கோபத்தை காட்டுவது, ரூமில் வைத்து பூட்டுவது, நான் பேச மாட்டேன் என்று மிரட்டுவது போன்றவை கூடாது. இது குழந்தையை மனதளவில் பாதிக்கும்.

சொல்லிக்கொடுத்த ஒழுக்கத்தை ஒவ்வொரு முறை சரியாக செய்யும் போது அது சிறு செயலாக இருந்தாலும் (உ-ம் தரையில் கிடக்கும் விளையாட்டுப் பொருட்களை ஒழுங்குபடுத்துவது) மனதார பாராட்ட வேண்டும். கைகளைத் தட்டி, குழந்தையை அணைத்து, தலையைத் தடவி நமது அருகாமையில் உணர்த்த வேண்டும்.

ஒரு ஒழுக்கத்தை சரியாக கடைபிடிக்காவிட்டால் என்னென்ன பின் விளைவுகள் என்று புரிய வைக்க வேண்டும். (உ-ம்) சிதறிக் கிடக்கும் கலர் பென்சில்களில் முக்கியமான பச்சை, சிவப்பு போன்றவற்றை காணவில்லையானால், 'நீ எப்படி உனக்கு பிடித்த பூ வரைய முடியும்?' என்று சொல்லி புரிய வைக்க வேண்டும்.

ஒழுங்கு நடைமுறையை ஒரே விதத்தில் அறிவுறுத்த வேண்டும். ஒரு நாள் சாப்பிடும் போது செல்போன் கூடாது என்பது மறுநாள் செல் வைத்திருந்தால் அதை கவனிக்காமல் விட்டு விடுவது என்று மாறி மாறி செய்யக்கூடாது.

சின்ன பிடிவாதங்களை கண்டு கொள்ளாமல் விட்டு விடலாம். அடம் பிடிக்கும் குழந்தையின் சக்தியையும், மனதையும் வேறு ஒரு உடல் சார்ந்த (நடனம், படம் வரைதல் போன்றவை) அல்லது உணர்வுகளை அழகாக வெளிப்படுத்தும் செயலில் ஈடுபடுத்தலாம்.

அடம் பிடிக்கும் குழந்தையுடன் நாம் மல்லு கட்டக் கூடாது.

இதை ஒரு 10உ என்று சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். ஒவ்வொரு 'ஊ' க்கும் நீங்கள் விரிவான விளக்கத்தையும், செயற்றிட்டங்களையும் யோசியுங்கள். ஏனென்றால் ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது!

அடம் பிடிக்கும் குழந்தையை சமாளிக்க பெற்றோர்கள் செய்ய வேண்டியவ

வ**Calm** - மிகவும் அமைதியாக நிதானமாக நடந்து கொள்வது

**Consistency**- ஒரே விதமான, திடமான அணுகுமுறை

**Clear Boundaries** - குழந்தையின் நடவடிக்கைகளுக்கு ஒரு எல்லை வகுத்துக் கொள்வது

**Choices** - மாற்றி யோசி!! (உதாரணம்: சோக்லேட்டுக்கு பதில் ஆப்பிள்)

**Consequences** - ஒழுங்காக நடந்து கொள்ளாவிட்டால் அதனால் ஏற்படும் பின் விளைவுகளை புரிய வைத்தல்

**Consider** - ஏன் அடம் பிடிக்கிறான் என்று அவனது கண்ணோட்டத்தில் பார்ப்பது.

**Compassion** - குழந்தையை பரிவுடன் அணுகுங்கள். (உ-ம்) ஓடாதே என்று அதட்டுவதை விட மெதுவா போடா கண்ணா என்று சொல்வது.

ஊழரளெநடடைபெ - நிறைய பேசுங்கள், பேச விடுங்கள்

**Comfort** - அவனுக்கு அரவணைப்பாக இருந்து கொண்டு புரிய வையுங்கள்

**Celebrate** - கொண்டாடுங்கள், நல்ல நடத்தையை உடனடியாக பாராட்டுங்கள்.

பெற்றோர்களும் அடம்பிடிக்காமல், வீட்டில் உள்ளவர்களும் அடம்பிடிக்காமல், கோபப்படாமல் இருந்து, குழந்தைக்கு நல்ல முன் உதாரணமாக இருக்கலாமல்லவா!







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.12.2025 வெளியிடப்பெற்றது.